# முதலீட்டாளர்களுக்கு
# எச்சரிக்கை !



**எக்ஸ்சேஞ்சின் வர்த்தக முறைக்கு அப்பாற்பட்டு பங்குகளில் வர்த்தகம் செய்யும் நபருடன் நீங்கள் நடவடிக்கை வைத்துக் கொண்டுள்ளீர்களா ?**

சில நேர்மையற்ற செயல்பாடுகளை உடையவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பங்கு சந்தைகளின் நிறுவப்பட்ட வர்த்தக முறைக்கு வெளியே பங்கு வர்த்தகம் செய்வதாக கூறப்படுகிறது. அவர்கள் தேசிய பங்கு சந்தை (NSE) போன்ற முக்கிய பங்கு சந்தைகளினால் ஆன்-லைன் மூலம் வெளியிடப்படும் பங்கு விலைகளை குறிப்பு விலைகளாகக் கொண்டுள்ளார்கள் மற்றும் இத்தகைய வர்த்தகங்களுக்கான கணக்கு வழக்குகளையும் வைத்துக்கொண்டு தங்களுடைய நடவடிக்கைகளை முறையற்ற முறையில் பெரும்பாலும் ரொக்க அடிப்படையில் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இந்த செயல்பாடுகள் முறையற்ற முன் கொண்டு செல்லப்படும் நடவடிக்கைகளுடன் கூட இணைக்கப்படுகிறது.

தேசிய பங்கு சந்தையின் (NSE) வர்த்தக உறுப்பினர் அல்லது அதன் பதிவு செய்யப்பெற்ற துணை தரகர் ஏவரேனும் இத்தகைய செயல்பாடுகளில் ஈடுபட்டிருப்பின், NSE-ன் விதிகள், துணை விதிகள் மற்றும் ஒழுங்கு முறை விதிகளை கடுமையாக மீறியதாக கருதப்பட்டு NSE-னால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



**சட்ட விரோதமான வர்த்தகத்திற்கெதிராக உங்களை நீங்கள் காத்துக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன ?**

ஒரு முதலீட்டாளர் சந்தை மூலமாக முதலீடு செய்யும் வழிமுறையில் நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம். பங்கு சந்தை வர்த்தக வழி முறைகளுக்கு வெளியே வர்த்தக நடவடிக்கையில் முதலீட்டாளர்கள் பங்கு கொள்வதால், ஏதேனும் வழக்கு காரணமாக தகராறு தீர்த்துக் கொள்ள மற்றும் பொதுவர் தீர்ப்பு வசதிகள் NSE யின் முதலீட்டாளர் பாதுகாப்பு நிதி வசதியும் பெற முடியாது.

## சரியாக முதலீடு செய்வீர், பாதுகாப்பாக முதலீடு செய்வீர் & உண்மை நடப்புகளை நன்கறிவீர்.



- பங்குகளை வாங்குவதும் விற்பதும் செபியின் பதிவு செய்யப் பெற்ற தரகர்கள் அல்லது அவர்களுடைய பதிவு செய்யப்பெற்ற துணை தரகர்கள் மூலமாக மட்டுமே மேற்கொள்ள வேண்டும். அவர்கள் வர்த்தகம் செய்யும் ஒவ்வொரு இடத்திலும் அவர்கள் தங்களுடைய செபி பதிவு சான்றிதழை காட்சிக்கு வைத்திருக்க வேண்டியது அவசியம்.
- உறுப்பினர் அமை ஒப்பந்தம் நிறைவேற்றவும் மற்றும் உங்கள் புரோக்கர் கையொப்பமிட்ட நகலை பெற்றுக் கொள்ளவும்.
- பூர்த்தி செய்து கையொப்பமிட்ட நடவடிக்கை பற்றிய ஓர் ஒப்பந்த குறிப்பை (கான்டிராக்ட நோட்) உங்கள் புரோக்கரிடமிருந்து 24 மணி நேரத்திற்குள் பெற்றுக் கொள்வதை உறுதிபடுத்திக் கொள்ளவும். மேலும் நீங்கள் www.nseindia.com/content/equities/eq_trdverify.htm எனும் NSE-ன் வலை மனையில் நடவடிக்கையின் உண்மைத் தன்மையை குறுக்குத் தணிக்கை செய்து கொள்ளலாம். இந்த தகவல் வர்த்தக தேதியிலிருந்து 5 வேலை நாட்கள் வரை கிடைக்கும்.



- NSE-ல் உங்கள் வர்த்தகம் தீர்பாகும் நாளிலிருந்து (செட்டில்மென்ட்டே) ஒரு வேலை நாளுக்குள் நீங்கள் பணம்/பங்குகள் பெறுவதை உறுதி படுத்திக்கொள்ளவும்.
- உங்கள் பங்குகளை கொடுப்பது/பெறுவது உங்கள் செபி பதிவு பெற்ற தரகர் மூலம்மட்டுமே செய்யப்பட வேண்டும்.
- மார்ஜின் மற்றும் கடமையை நிறைவேற்றல் சம்பந்தமான செய்யும் அனைத்து பணச் செலுத்தம் செய்வதும் பெறுவதும் அக்கவுன்ட் பேயி காசோலை/கேட்பு வரை ஓலை மூலமாக மட்டுமே செபி பதிவு பெற்ற தரகருக்கு தீர்க்கப்பட வேண்டும்.

இந்த வழிமுறைகள் யாவும் உங்களுடைய நன்மை மிக்க செயல்பாட்டிற்காக ஆகும்.


**நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சு ஆஃப் இந்தியா லிமிடெட்**

''எக்ஸ்சேஞ்சு பிளாசா'', பாந்திரா-குர்லா காம்ப்ளெக்ஸ், பாந்திரா (கி), மும்பை-400051

தொலைபேசி : 022-26598100-8114, ஃபேக்ஸ் : 022-26598120 மின் அஞ்சல் : cc_nse@nse.co.in

தயவுசெய்து எமது இணையதளத்திற்கு வருகை புரியவும் : www.nseindia.com பொது நலன் கருதி வெளியிடுவோர் NSE


A B and U - ia